அறிவொளி
சிறுவர்
இலக்கிய கதைத் தொடர்

# அறிவொளி

## சிறுவர் கதைத்தொகுதி – பாகம் I




எட்டு வயதுக்கும் பதினைந்துவயதுக்கும் உட்பட்ட சிறுவர்களுக்கும்
சிறுவர் நூலகத்திற்கும் உகந்த நூல்

விலை 20/=

தொகுப்பாக்கம்: கலாநிதி பொன். சக்திவேல்.

BRIGHT BOOK CENTRE
BRIGHT FUTURE IN YOUR HAND
BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27 FIRST FLOOR, P. O. BOX NO: 162,
COLOMBO CENTRAL SUPER MARKET
COMPLEX COLOMBO - 11. TELE: 434770


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55

## 01 ஒரு குருடரும் ஒரு விளக்கும்

சந்துரு என்பவன் முதிய குருட்டு மனிதன். ஒரு நாள் நள்ளிரவில் அவன் தனது குடிசையை விட்டு ரோட்டுக்கு வந்தான். அவன் தனது கையொன்றில் மண் குடம் ஒன்றையும், மறுகரத்தில் விளக்கு ஒன்றையும் வைத்திருந்தான்.



ஒரு இளம் மனிதன் அடுத்த பக்கத்திலிருந்து வந்தான். அவன் சந்துருவின் பக்கத்தில் வந்து, "சந்துரு நீ ஒரு குருடனா அல்லது ஏமாற்றுகிறீரா. உன்னால் பார்க்க முடியாது ஆனால் நீ உனது கையில் விளக்கை கொண்டு செல்கின்றாய்,"

சந்துரு சிரித்தபடி "இளம் மனிதரே சத்தம் போடாதீர்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். இந்த விளக்கானது எனக்கா அல்ல. இது உங்களுக்கும் மற்றவர்களுக்கும் தான். நான் இரவு வேளைகளில் வெளியே செல்லும் போது எனது கைகளில் விளக்கு இருக்கும். ரோட்டில் செல்லும் மக்கள் இந்த விளக்கின் உதவியால் என்னை மோதாமல் செல்கிறார்கள். என்று கூறினான்

இளம் மனிதரும் குருடன் கூறியதன் உண்மையை உணர்ந்து கொண்டான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02 நாலு முட்டாள்கள்

ஒரு அழகான சிறிய பறவை யொன்று மலையில் வசித்து வந்தது. இது மரத்துக்கு மரம் சென்று அழகாக பாடியது. இதனால் பறவை மகிழ்ச்சியுடன் வாழ்ந்தது.

ஒவ்வொரு நாள் காலையிலும் பறவை மரத்தின் உச்சி சென்று பாட்டுப் பாடும். இது பாட்டுப்பாடும் போது பொன் அரிசிகள் அதன் வாயிலிருந்து விழும்.

ஒருநாள் வேட்டைக்காரன் ஒருவன் இந்தப் பறவையை பார்த்தான். இது பாடும் போது பொன் அரிசிகள் அதனது வாயிலிருந்து வீழ்ந்தது. வேடன் "நான் இந்த பொன்னைத்தரும் பறவை பிடித்து வீட்டுக்கு கொண்டு செல்வேன்" எனக் கூறினான்.




அவன் கொஞ்ச நெல் மணிகளை வலைமீது போட்டு காத்திருந்தான் கொஞ்ச நேரத்தில் பறவை பறந்து வந்து நெல்லு மணிகள் கண்டு அதன் மீது இருந்தது. வேடன் பறவையை பிடித்தான்.

கொஞ்ச நாட்களாக வேடன் வீட்டில் பறவை பொன் அரிசிகள் கொட்டியது. அவனிடம் அதிக பொன்கள் சேர்ந்ததும். அவன் பணக்காரன் ஆனான். அவன் "நான் இந்தப் பறவையை அரசனுக்கு கொடுத்துவிட்டு அவரிடம் மரியாதையைப் பெறப் போகிறேன்" எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினான். அவன் அரண்மனைக்கு சென்று பறவை அரசனிடம் ஒப்படைத்தான்.



அரசனும் அவனுக்கு பெரும் மரியாதை கொடுத்ததோடு. வேடனுக்கு அதிக பணமும் கொடுத்தான். பறவை பாடிய போது பொன் அரிசிகள் வீழ்ந்தன. கொஞ்ச நாட்களில் அரசனிடம் அதிக பொன்கள் இருந்தது.

ஒரு நாள் மன்னனின் அமைச்சர் ஒருவர் வந்து பறவையை பார்த்தார். அவர் அரசனை நோக்கி "இந்த வேடன் உங்களை ஏமாற்றிவிட்டான். இந்த பறவை உங்களுக்கு தீங்கை கொண்டு வந்துள்ளது. தயவு செய்து அதனை உடனே பறக்க விடுங்கள்.


அரசனும் அமைச்சர் சொல்வதை நம்பி பறவையை திறந்து விட்டான். பறவை மன்னனின் அரண்மனை கூரையில் இருந்து பாடியது. இங்கு நாலு முட்டாள்கள். நான் வேடனின் வலை மீது இருந்தேன். எனவே நான் முதல் முட்டாள். என்னை மன்னனிடம் கொடுத்த வேடன் இரண்டாவது முட்டாள். என்னை பறக்கவிட்ட மன்னன் மூன்றாவது முட்டாள். அமைச்சர் பொய்யை சொன்னார் அவர் நாலாவது முட்டாள்" எனக் கூறிவிட்டு மலையை நோக்கி பறந்து சென்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03 செவிடனும் ஊமையும்

ஒரு நாள் பிச்சைக் காரன் ஒருவன் தனது நெஞ்சில் தான் ஒரு செவிடன் எனவும் ஊமை எனவும் ஒரு கார்ட்போர்ட் எழுதி போட்டிருந்தார். அதன் பின் றோட்டு ஓரத்தில் பிச்சை எடுப்பதற்காக இருந்தான் பாதையோரமாக செல்வோர். அவனுக்கு அவன் வைத்திருந்த தட்டில் காசைப் போட்டனர்.



அவன் இருந்த இடத்திற்கு எதிரே இன்னொருவனும் பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான். அவன் தெருவில் போவோருக்கு "நான் வயது முதிந்தவன், எனக்கு தாய் தந்தையரோ, உறவினர்களோ இந்த உலகில் இல்லை. தயவு செய்து எனக்கு பிச்சையிடுங்கள் அதற்கு கடவுள் புண்ணியம் செய்வார்" எனக் கூறினான் ஆனால் ஒருவரும் அவனுக்கு பிச்சையிட வில்லை. அவன் முதல் பிச்சைக்காரனிடம் கோபம் கொண்டு இருந்தான்.

சிறிது நேரத்தின் பின் நன்றாக உடையணிந்த இளம் வாலிபர் ஒருவர் அவ்வழியே வந்தார். அவன் முதல் பிச்சைக்காரருக்கு ஒரு ரூபா காசை பைக்கட்டிலிருந்து எடுத்துப் போட்டார். ஆனால் இரண்டாவது பிச்சைக்காரர் "ஐயா அவருக்கு பிச்சை போடாதீர்கள். அவன் செவிடனும் அல்ல ஊமையும் அல்ல. அவன் ஒரு ஏமாற்றுகாரன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது பிச்சைக்காரன் இச் சொற்களை கேட்டு கடும் கோபம் கொண்டான். அவன் பலத்த சத்தத்தில் "நான் ஒரு ஏமாற்றுகாரன் இல்லை. நீதான் வெறும் புழுகன். நான் செவிடனும் ஊமையும் ஆவேன். எனக்கூறினான்.

அந்த இளம் மனிதன் சிரித்தபடி, ஒரு ஊமையால் கதைக்க முடியாது. செவிடனால் கேட்க முடியாது. நீ தான் ஏமாற்றுக்காரன் எனக் கூறி அவனுக்கு காசு கொடுக்காது மற்றவருக்கு கொடுத்தார்

## 04 வழிப் போக்கனும் குரங்குகளும்

வெயில் அதிக இருந்த ஒருநாள் வழிப் போக்கன் ஒருவன் ஒரு பெட்டியுடன் நடந்து சென்றான். வெயில் களைப்பினால் தனது பெட்டியை ஒரு மரநிழலில் வைத்து விட்டு அவ்விடத்திலேயே நித்திரை கொண்டான்.




. வெய்யில் அதிகமான படியால் வழிபோக்கன் களைத்து விட்டான். அவன் ஆழ்ந்த நித்திரையில் இருக்கும் போது மரத்திலிருந்த குரங்குகள் கீழே வந்து பெட்டியை எட்டி எட்டிப் பார்த்தன. அப்பெட்டியில் விற்பதற்காக தொப்பிகள் வைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு குரங்கும் ஒவ்வொரு தொப்பி போட்ட படி மரத்தில் ஏறி கிளைக்குக்கிளை தாவியது.

சில மணி நேரத்திற்கு பின் வழிப் போக்கன் நித்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டெழுந்தான். தனது பெட்டியில் இருந்த தொப்பிகளை காணாது கவலை கொண்டான். பின்பு மேலே பார்த்த போது தான் குரங்கின் சேட்டை என புரிந்தது. அவன் குரங்குகளிடம் கெஞ்சி கேட்டுப்பார்த்தான். அவையும் அவன் செய்வது போல கெஞ்சின. அப்போது தான் அவனுக்கு சமயோசித புத்தி ஏற்பட்டது. தனது தொப்பியைக் கழட்டி எறிந்தான். குரங்குகளும் தொப்பிகளை எறிந்தன. வழிப் போக்கன் அவற்றை எல்லாம் பெறுக்கி பெட்டியில் போட்டு கொண்டு சென்றான்.



## 05 மையொத்தும் கடதாசி தா

ஒரு ஊரில் செல்வந்தன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு வருத்தம் வந்தது. அவன் தனது சேவகனிடம் டாக்டரிடம் சென்று மருந்து வாங்கி வரும்படி கேட்டான். டாக்டர் கறுப்பு நிறமான கலவை ஒன்றை அவனிடம் கொடுத்து விட்டார். சேவகன் தான் கொண்டு வந்த மருந்துப் போத்தலை செல்வந்தனுடைய அலுமாரியில் வைத்தான்.


இரவு சாப்பாட்டுக்கு பின் செல்வந்தன் சேவகனிடம் "மருந்து போத்தல் எங்கே என்று கேட்டார்? அதை இங்கே கொண்டுவா" என்று கூறினார். அப்போது சேவகனும் அலுமாரியிலிருந்த போத்தல் ஒன்றைக் கொண்டு வந்து கொடுத்தான். அவன் மருந்து எனக் கொண்டு வந்தது மைப் போத்தல் ஆகும். எசமானும் பராது போத்தலை திறந்து குடித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேவகன் தவறுதலாக மை போத்தலை கொடுத்ததை கண்டு "ஐயா என்னை மன்னியுங்கள். நான் பெரும் பிழை விட்டுவிட்டேன் நான் தவறுதலாக உங்களிடம் மைப்போத்தலை தந்து விட்டேன். இப்போது என்ன செய்வது ஐயா"




"அழாதே" என கூறினார் எஜமான், நீ எனக்கு மை யொத்தும் பேப்பர்கள் சில தா நான் அவன் சாப்பிடுகிறேன் எல்லாம் சரியாகும். எனக் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 06 சிறந்த மருந்து



ஒரு குகை யொன்றில் சிங்கம் ஒன்று வருத்தத்தில் படுத்து இருந்தது. காட்டிலுள்ள எல்லா மிருகங்களும் சிங்கத்தை குகையில் சென்று பார்த்து வந்தது. ஆனால் நரி ஒன்று மாத்திரம் குகைக்கு செல்ல வில்லை.

ஓநாய் நரியின் எதிரியாகும். ஒருநாள் ஓநாய் சிங்கத்தின் குகைக்கு சென்றது: அங்கு "ஐயா தயவு செய்து நான் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் சுகமில்லாமல் இருக்கிறீர்கள். எல்லா மிருகங்களும் உங்களை வந்து பார்த்துவிட்டன நரி மாத்திரம் தனது பெருமையில் உங்களைப் பார்க்க வரவில்லை" எனக் கூறியது.

நரி குகையின் ஓரத்தில் இருந்து அவர்கள் கதைப்பதை கேட்டபடியிருந்தது. சில நிமிடங்கள் தாமதித்து நரி சிங்கத்தின் குகைப் பக்கம் சென்றது.

சிங்கம் நரியை கண்டவுடன் கோபத்தில் கர்ச்சித்தது. நான் உன்னுடன் கோபமாக உள்ளேன். நீ என்னைப் பார்க்க வரவில்லை. நான் உன்னுடைய அரசன் இல்லையா? நான் உன்னை கொண்று உன்னுடைய இரத்தத்தை குடிக்க போகிறேன். நீ என்னுடைய எதிரி எனக் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரி சிங்கத்தைப் பார்த்து. நான் உங்கள் மீது கோபம் இல்லை. அரசே நான் உங்களின் நண்பன். மற்ற மிருகங்கள் எல்லாம் உங்களை பார்க்க வந்தனவே ஒழிய அவைகள் உங்களுக்கு ஒன்றும் செய்ய வில்லையே எனக் கூறியதோடு நான் உங்களுக்காக எல்லா இடங்களிலும் டாக்டரைத் தேடினேன். டாக்டர் என்ன சொன்னார். எனக் கேட்டது. சிங்கம். நரி சொன்னது ஒரு ஓநாயின் இரத்தம் தான் உங்களின் வருத்திற்கு மிகவும் நன்று. அப்படி சாப்பிட்டால் உடன் வருத்தம் மாறும் எனக் கூறியது.

சிங்கம் ஓநாயைக் கொன்று அதன் இரத்தத்தைக் குடித்தது.

## 07 முட்டாள்களில் பட்டியல்



ஒரு ஊரில் வாழ்ந்த அரசனுக்கு குதிரைகள் மீது நல்ல ஆசை. இதனால் ஒவ்வொரு நாளும் வெளிஊரில் உள்ளவர்கள் வந்து அரசரிடம் "ஐயா என்னிடம் அழகான ஒரு குதிரை உள்ளது. அது உங்களுக்குதான் மிகவும் பொருத்தமானது. தயவு செய்து கொஞ்சம் பணம் தாருங்கள் நாளை குதிரையை கொண்டுவருகிறேன் எனக்கூறி அரசனிடம் பணம் பெற்று சென்றார்கள். ஆனால் ஒருவரும் குதிரையை கொண்டு வரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் அரசன் தனது அமைச்சரை நோக்கி "தயவு செய்து முட்டாள்களின் பெயர் பட்டியல் போட்டு என்னிடம் தா என்று கேட்டார். நன்றி ஐயா நாளை பட்டியலை உங்களிடம் தருகிறேன் ஐயா" என கூறினார்.

அடுத்த நாள் அமைச்சர் அரசரிடம் தனது பட்டியலைக் கொடுத்தார். அரசர் பட்டியல் பார்த்து கடும் கோபம் உற்றார். அவனைப் பார்த்து. "நீ என்ன பட்டியலில் எனது பெயரை முதலாவதாக போட்டுள்ளாய்? ஏன் இப்படிச் செய்தாய்"

"ஆம் ஐயா. நான் அப்படியே தான் செய்தேன்" எனக் கூறினார் அமைச்சர். நீங்கள் தெரியாதவர்களுக்கெல்லாம் குதிரை வாங்குவதற்காக காசு கொடுக்கிறீர்கள். ஆனால் அவர்கள் காசை வேண்டிக் கொண்டு போகிறார்கள் ஒழிய - ஒருவன் சரி திருப்பி வருவதில்லை. இதனால்தான் உங்கள் பெயரை பட்டியலில் போட்டு உள்ளேன்.

அரசன் " ஆனால் நான் காசு கொடுத்தவர்கள் குதிரையை கொண்டு வந்தால் நீ யாது செய்வாய்? எனக் கேட்டார்.

அப்படி நிகழ்ந்தால் உங்கள் பெயரை பட்டியலில் இருந்து நீக்கி விட்டு, அவர்களின் பெயர்களை பட்டியலில் சேர்ப்பேன் எனக் கூறினர். அமைச்சர்.

## 08 பேராசைக்கார நாய்

ஒரு நாய் ஒன்று இறைச்சித் துண்டொன்றை இறைச்சிக் கடையில் கௌவிக் கொண்டு ஓடியது. அது ஆற்றைக் கடப்பதற்காக பாலத்தின் மேல் ஓடியது.

ஓடும் போது நாய் பாலத்தின் அருகே பார்த்த போது அதன் உருவம் தண்ணீரில் பிரதிபலித்தது. அதைப்பார்த்து தனக்குள் நாய் எண்ணியது. "அதோ ஆற்றின் உள்ளே ஒரு நாய் இருக்கிறது. அது பெரிய தோர் இறைச்சித் துண்டை வைத்திருக்கிறது". நான் அந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயைக் கொன்று அந்த இறைச்சி துண்டையும் எடுப்போம்" என எண்ணியது.



நாய் அவாவினால் தனது வாயைத்திறந்தது வாயிலிருந்த இறைச்சித் துண்டு ஆற்றில் விழ்ந்தது. அது இறைச்சித்துண்டை எடுக்க ஆற்றுக்குள் பாய்ந்தது. ஆற்றுக்குள் இருந்த நாயையும் காணவில்லை. இப்போது தான் வைத்திருந்த துண்டையும் இழந்த நாய்.

முட்டாள் நாய் ஆற்றை நீந்திக் கரையை அடைந்தது. அது கவலையுடன் ஆற்றங்கரையில் இருந்து "பேராசை பெரு நட்டம்" என எண்ணியது.

## 09 புத்திசாலி முயல்

ஒரு சிங்கம் ஒன்று காட்டில் இருந்தது. அச்சிங்கம் எல்லா மிருகங்களையும் கொன்று சாப்பிட்டது. இதனால் மிருகங்கள் எல்லாம் கவலையுடன் இருந்தன. ஒரு நாள் அவை எல்லாம் ஒன்று கூடி சிங்கத்தைக் காணச் சென்றது. அவை முதிய சிங்கத்தைப் பார்த்து. "ஐயா நீங்கள் எங்களது அரசர். நாங்கள் உங்களது பிரசைகள். நாங்கள் உங்களில் அன்புடையவர். ஆகவே தயவு செய்து ஒரு நாளைக்கு ஒரு மிருகத்திற்கு மேல் சாப்பிட வேண்டாம்" எனவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒவ்வொரு நாளும் எம்மில் ஒருவர் உங்கள் உணவுக்காக உங்களின் குகையருகே வருவோம் எனக் கூறியது. சிங்கமும் ஒத்துக்கொண்டது. சிங்கம் கூறியது மிகவும் நல்லது ஒவ்வொரு நாளும் ஒரு மிருகமாக பருத்த மிருகமாக அனுப்புங்கள் எனக்கூறியது.

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மிருகங்கள் சிங்கத்திற்கு உணவாக சென்றன. ஒருநாள் முயலுக்கு உரிய நாள் வந்தது. அந்நாளில் முயல் "மிகவும் நல்லது இன்று நான் சிங்கத்தின் குகைக்கு செல்கிறேன்". இன்றைய சிங்கத்தின் உணவு நான் என எண்ணியது.

காலை வரவேண்டிய முயல் நேரத்திற்கு குகைக்கு வராதால் சிங்கம் கர்ச்சித்த படி இருந்தது.


முயல் மாலை நேரம் சிங்கத்தின் குகைக்கு வந்தது. சிங்கம் கோபமாக இருந்தது. அது உறுமியபடி ஏன் பிந்தி வருகிறாய்? நான் மிகவும் பசியாக உள்ளேன். ஏன் காலையில் எங்கே போனாய் எனக் கேட்டது.

முயல் "ஐயா கோபம் கொள்ள வேண்டாம். நான் காலையிலேயே வீட்டிலிருந்து வெளிக்கிட்டு விட்டேன். ஆனால் நான் வருகிற பாதையில் இன்னொரு சிங்கத்தைப் பார்த்தேன். அது தான் என்னை மறித்து விட்டது அது மிகவும் பலம் வாய்ந்த சிங்கம் ஐயா" எனக்கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கம் அப்போது மிகவும் கோபம் கொண்டது. அது கர்ச்சித்தபடி "நான் அந்த சிங்கத்தை கொல்லுகிறேன் அது இருக்கும் இடத்திற்கு என்னைக் கொண்டு போ எனக் கூறியது.



புத்திசாலி முயல் ஆழமான கிணற்றைக் காட்டி "அதோ நிற்கிறது சிங்கம் ஐயா" எனக் கூறியது. சிங்கம் கிணற்றை எட்டிப்பார்த்த போது தண்ணீரில் அதன் உருவம் தெரிந்தது. சிங்கம் உறுமிக் கொண்டு கிணற்றில் பாய்ந்தது.


சிங்கம் கிணற்றில் வீழ்ந்து இறந்தது. முயல் மகிழ்ச்சியுடன் வந்து செய்தியை மற்ற மிருகங்களுக்கு சொன்னது.

## 10 முட்டால் கமக்காரன்


முன்னொரு கால்த்தில் முட்டாள் கமக்காரன் ஒருவன் கிராமத்தில் வாழ்ந்தான். அவன் பெயர் பாலா. அவன் தனது வயலில் பருத்தி வளர்த்து அதிலிருந்து கிடைக்கும் பஞ்சை சந்தையில் விற்று வந்தான். ஒரு நாள் பஞ்சு மூட்டையை சந்தைக்கு கொண்டு வந்தான். ஒவ்வொருவரும் அவன் கொண்டு வந்த பஞ்சைக் பார்த்து "இது என்ன ஊத்தை" எல்லோரும் கேட்டனர். அவன் கவலையுடன் பஞ்சு மூட்டையை வீட்டைக் கொண்டு சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவன் வீட்டைதிருப்பி போகும் போது ஒரு கொல்லன் கம்மாலையை கண்டான். அங்கு நெருப்பு சுவாலை கம்மாலையில் வந்ததை பார்த்து. பாலா கொல்லனிடம் என்ன செய்கிறீர்கள் எனக் கேட்டான். கொல்லன் இதோ பார் இரும்புகளை நெருப்பில் இட்டு அழகான ஆயுதங்கள் செய்வதாக கூறினான். இந்த நெருப்பு சுவாலை இரும்பை சுத்தமாக்கிறது. அதன் பின் ஆயுதங்கள் பளிச்சிடுகின்றன எனக் கூறினான்.



பாலா ஆச்சரியப்பட்டான். அவன் கொல்லன் கம்மாலையை விட்டு வீட்டுக்கு ஓடிச் சென்றான். வீட்டில் பஞ்சு மூட்டையை எடுத்து முற்றத்தில் கொட்டி நெருப்பை மூட்டினான், பஞ்சு முழுவதும் நெருப்பில் எரிந்தது. முட்டாள் பாலா தனது முட்டாள் தனத்தை எண்ணி கவலைப்பட்டான்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் யார்?

முன்னொரு காலத்திலே நான்கு சிநேகிதர்கள் ஒன்றாக வாழ்ந்தனர், அவர்களில் ஒருவர் தச்சு வேலைக்காரர். அடுத்தவர் தையல் தொழிலாளர், ஒருவர் பொற்றொழிலாளர், மற்றவர் ஒரு மந்திரவாதி ஆவர், அவர்கள் தங்களுடைய கிராமத்திலிருந்து பணம் சம்பாதிப்பதற்காக நகரத்திற்கு புறப்பட்டனர், அவர்கள் இருபது மைல் தூரம் நடந்து களைப்பால் அங்குள்ள மடம் ஒன்றில் தங்கி அன்று இரவை கழிக்க எண்ணினர்.

அவர்கள். இரவுச்சாப்பாட்டை முடித்து நித்திரை கொள்ள எண்ணினார்கள். அப்போது பொற்றொழிலாளர் "சிநேகிதர்களே என்னிடம் கொஞ்ச பொற்காசுகள் உள்ளன. எனவே எங்களில் மூன்றுபேர் நித்திரை கொண்டு ஒவ்வொருவராக முழித்து இருப்போம்" எனக் கூறினார். அதன்படி அவர்கள் முறைப்படி காவல்காக்க எண்ணினார்.



மந்திரவாதியும், பொற்கொல்லனும். தையற்காரரும் படுக்கச் சென்றனர். தச்சு வேலைக்காரர் காவல் காத்தார். அவருக்கு சும்மா விழித்திருக்க சோம்பலாக இருந்தது. அவன் தனக்குள்ளேயே எனக்கு நித்திரை வருகிறதே என எண்ணியபடி ஏதாவது செய்வோமா என எண்ணினான். தன்னிடமுள்ள மர ஆயுதங்களை எடுத்து அழகான ஒரு பொம்மை ஒன்றை செய்தான். அதன் பின் படுக்க சென்றான்.

பின் தையல்காரன் அங்கு ஒரு பொம்மை செய்யப்பட்டு உள்ளதை பார்த்தான். அது அழகாக இருந்தது. அதற்கு அழகான கலரில் உடுப்பு தைத்து அதன் அழகை கூட்ட எண்ணினான் நல்ல உடுப்பு தைத்து போட்டான்.

அதன்பின் பொற்கொல்லன் எழுந்தான் அவனும் அழகான பொம்மையை பார்த்து அதற்கு அழகான மோதிரம் மொன்றையும், சங்கிலியும் செய்து போட எண்ணி தனது பொற்காசில் அழகான மோதிர மொன்றையும் சங்கிலியையும் செய்து போட்டான், பொம்மை மிக அழகாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நித்திரைக்கு செல்ல மந்திரவாதி இந்த அழகான பொம்மையைக் கண்டான்.

அவன் தனது மந்திரசக்தியினால் அப்பொம்மைக்கு உயிர் கொடுக்க நினைத்தான் அதற்காக பொம்மையை கிணற்றில் நீராட்டி தனது மந்திரங்களை ஜெபிக்க தொடங்கினான். அழகான பொம்மை உயிருள்ள அழகான இளம் பெண்ணாக மாறியது.

அடுத்த நாள் அதிகாலை தச்சுத் தொழிலாளி, தையல் காரன், பொற்கொல்லன் ஆகியோர் எழுந்து பார்த்த போது அங்கு அழகான இளம் பெண் இருந்தாள். அப்பொழுது மந்திர வாதி தான் தான் அவளுக்கு உயிர் கொடுத்தாகவும், தான் அவளை கல்யாணம் செய்யப் போவதாக வும் கூறினான்.

தச்சன் "எப்படி நீ அவளை மணக்க முடியும். நான்தான் பொம்மை செய்ய தொடங்கியவன். எனவே நான் தான் அவளை கல்யாணம் கட்டலாம் என்றான். தையற்காரன் நீங்கள் கட்டமுடியாது நான்தான் அவளுக்கு உடுப்பு போட்டு அழகாக்கியவன். எனவே அவளை நான் தான் கட்ட வேண்டும் என்றான்

பொற்கொல்லன் மிக கோபம் கொண்டான். அவன் "அவளை நீங்கள் ஒருவரும் கல்யாணம் முடிக்க முடியாது. விலைமதிப்புள்ள தங்காபரணங்களாகிய மோதிரமும், சங்கிலியும் நான் தான் போட்டுஉள்ளேன், எனவே நான்தான் அவளை கட்ட வேண்டும் என்று கூறினான்.

இவர்கள் நால்வரும் ஒரு பெண்ணை வைத்திருந்து கொண்டு சண்டை பிடிப்பதை கண்ட முதியவர் ஒருவர் அவ்விடம் வந்தார். அவர் வினாவ, இவர்கள் நடந்த கதை முழுவதையும் கூறினார்கள்.

அதற்கு அந்த முதியவர், "கேளுங்கள் தச்சர் பொம்மையை செய்தார். மந்திரவாதி உயிரைக் கொடுத்தார், எனவே நீங்கள் தான் பெண்ணின் பெற்றோர். எனவே உங்கள் இருவரில் ஒருவரும் அவளைக்கட்ட முடியாது. தையற்காரன் அவளுக்கு துணி தைத்து கொடுத்துள்ளாய் "நீ அவளுடைய மாமா எனவே நீயும் அவளைக் கட்டமுடியாது. பொற்கொல்லன் தான் அவளுக்கு மண மோதிரமும் சங்கிலியும் போட்டுள்ளான் எனவே அவன்தான் அவளுக்குரிய மாப்பிள்ளை எனக் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Happy Birthday Gift

To: ....................................

From: ....................................

BRIGHT அறிவொளி நீதிநூல் வரிசைநூல்

* உலக நீதி
* ஆத்தி சூடி
* கொன்றை வேந்தன்
* மூதுரை
* நல்வழி
* நன்நெறி

Bright Future in Your Hand

விலை 75/=

## Happy Birthday Gift

To: ....................................

From ....................................

BRIGHT சிறுவர்களுக்கான அறிவியல் ஆரம்

* 10 வது சார்க் மாநாடு
* சிறுவர்களுக்கான இராமாயணம்
* விந்தை புரிந்த விஞ்ஞானிகள்
* ஐக்கிய நாடுகளும் அதன் நிறுவனங்களும்
* இலங்கையும் கிரிக்கெட்டும்
* இலங்கை வரலாறு (சிறுவர்களுக்கானது)

Bright Future in Your Hand

விலை 75/=



சிறுவர், சிறுமிகளுக்கான,
பிறந்த தின விழாக்களுக்கு

### பரிசளியுங்கள்

BRIGHT - அறிவொளி சிறுவர் கதைகள்
BRIGHT ன் – சிறுவர்களுக்கான அறிவியல் ஆரம்
BRIGHT ன் – அறிவொளி நீதிநூல் வரிசை நூல்கள

## Happy Birthday Gift

To: ....................................

From: ....................................

BRIGHT அறிவொளி சிறுவர் கதைப் பொதிகள்

1. அலி[illegible]ாவும் 40 திருடர்களும்
2. அலாவுதீனும் அற்புத விளக்கும்
3. தென்னாலி ராமன் கதைகள்
4. பஞ்சதந்[illegible] கதைகள்
5. பரமார்த்த குருவும் சீடர்களும்
6. சிறுவர் கதைக் களஞ்சியம்

விலை 135/=

Bright Future in Your Hand

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org